2005 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 235, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

235—

குடமுழுக்கு

***69490—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, வரலாற்றுச் சிறப்புமிகுந்த கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயில் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளதைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பத்மநாபபுரம் தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயிலைப் புதுப்பித்து, குடமுழுக்கு நடத்திடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பத்மநாபபுரம் அரண்மனைக் கோட்டைக்குள் இருந்துவரும் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்குளம் திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயில் சுமார் 350 வருடங்களுக்கு முன்பாக சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயில் மாதிரி வடிவத்தில் அமைக்கப்பட்டதாகும். 2 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இக்கோயில், சிவபுராண வரலாறு தொடர்புடைய 12 சிவாலயங்களில் சிறப்புமிக்க 7–வது கோயிலாகும். திருவட்டாறு, ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு உட்பட்ட கல்குளம் தாலுகாவிலிருந்துவரும் அனைத்துக் கோயில்களிடம் உள்ள தங்கம், வைரம் போன்ற கோடிக்கணக்கான விலை மதிப்புள்ள ஆபரணங்கள் இந்தக் கோயிலில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மிகப் பழமையான இந்தக் கோயில் கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்கள் ஒவ்வொன்றாக இடிந்து கீழே விழுந்து

வருகின்றன. கடந்த 100 ஆண்டுகளுக்கு முன்பாக இந்தக் கோயில் கும்பாபிஷேகம் நடைபெற்றிருக்கலாம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி திருக்கோயிலுக்கு அடுத்தபடியாக குமரி மாவட்டத்திலே அனைத்துச் சிறப்புகளும் வாய்ந்த இந்த நீலகண்டசுவாமி கோயிலைப் பழுதுபார்த்து, குளம் தூர் வாரி, கும்பாபிஷேகம் நடத்துவது மிகவும் தேவையான ஒன்றாகும். ஆகையால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனிக் கவனம் செலுத்தி, நடப்பாண்டிலாவது, திருநீலகண்டசுவாமி திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நடத்தி, அதனுடைய பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்களில் கல்குளம் அருள்மிகு திருநயினார் நீலகண்டசுவாமி திருக்கோயிலும் ஒன்றாகும். இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தொகுப்பில் மொத்தம் 490 திருக்கோயில்கள் ஒரே நிர்வாகத்தின்கீழ் உள்ளன. இத்திருக்கோயிலின் மிகவும் பழுதடைந்த நிலையைக் கருத்தில் கொண்டு, கடந்த 2001 ஆம் ஆண்டில் 6 இலட்சம் ரூபாய் மதிப்பில் மேற்கூரை, தள ஓடு புதிதாக அமைக்கப்பட்டுச் சரி செய்யப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலை முழுவதும் புதுப்பித்திட சுமார் ரூ.80 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. சுசீந்திரம் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில்கள் தொகுப்பு நிர்வாகத்தில் 5 திருக்கோயில்கள் மட்டுமே பிரதானமாக வருவாய் பெறுகின்றன. இத்திருக்கோயிலுக்கு நிர்வாகச் செலவினங்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.33.70 இலட்சம் ரூபாயை அரசுமூலம் மானியமாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு வழங்குகிறது. இந்நிலையில் உடனடியாகப் பெரும் செலவினத்தை மேற்கொண்டு, மேற்படி திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்ய வாய்ப்பு இல்லை. மாண்புமிகு உறுப்பினர் மேற்படி திருக்கோயில் திருப்பணிக்காகத் திருப்பணிக் குழு அமைத்து உபயதாரர்கள் மூலம் நன்கொடை திரட்டி, பணிகளை மேற்கொண்டால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மொத்த மதிப்பீட்டில் மூன்றில் ஒரு பங்கை வழங்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநயினார் திருநீலகண்ட சுவாமி கோயிலில் ஒவ்வொரு

2005 மார்ச் 29]

ஆண்டும் 10 நாட்கள் அதனுடைய திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று, கேரளாவிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வந்து செல்கிறார்கள். இந்தக் கோயிலில் கமிட்டி அமைப்பதற்கு தேவஸ்வம் போர்டிலிருந்து பொறுப்பான தலைவர்களும், அமைச்சர் அவர்களும் முயற்சி செய்து, அதற்கான வசதிகளை உருவாக்கித் தருவார்களேயானால், அந்த கமிட்டிக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தரலாம் என்று அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொண்டு, இந்தக் கோயிலினுடைய நிலையை உணர்ந்து, அமைச்சர் அவர்கள் இந்தக் கோயில்மீது தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று மீண்டும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா அவர்களுடைய அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இதுவரையிலும் சரித்திரத்திலே இல்லாத அளவிற்கு 3,800 ஆலயங்களில் திருப்பணி செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 21 ஆம் தேதி அன்று 753 ஆலயங்களுக்கு அம்மா அவர்கள் திருப்பணி செய்வதற்கு ஆணையிட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில், இங்கே தாங்கள் சொல்லிய அந்த ஆலயத்திற்குத் திருப்பணிக் குழு அமைத்து, வசதி படைத்தவர்களிடம், ஆன்மீக பக்தர்களிடத்திலே நீங்கள் வசூல் செய்து, திருப்பணி செய்வதற்கு முன்வருவீர்களேயானால், அரசின்மூலமாக மானியம் கொடுக்கப்பட்டு, அந்தத் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீண்டும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 236, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

236—

மருத்துவமனை வசதிகள்

***42347—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் படுக்கைகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், கூடுதல் மருத்துவர்களை நியமிக்கவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?